**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**வத்திராயிருப்பு**
**அசல் வழக்கு எண். 146/2024**

**வா.சா. 1 ஜெயமேரி**

**நாள் 21.01.2026**

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். 2 வது வாதி ரவிக்குமார் எனது மகன் என்றால் சரிதான். எத்தனை சொத்துக்களுக்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 செண்ட் நிலத்துக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 வது தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது மகனுக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும்.என்னிடம் காண்பிக்கப்படும் வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் வழக்குரையை வழக்கறிஞர் படித்துக் காண்பித்து தெரிந்து கொண்டுதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

பிராது பக்கம் 3, பாரா 4ல் 2 வது தபசில் சொத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரை 2 வது தபசில் சொத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கூறிவிட்டு, வழக்கில் 2 வது தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோர சட்டப்படி உரிமையல்ல என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 1437/1ல் மொத்தம் 31 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 31 செண்ட் நிலமானது 13 நபர்களுக்கு கூட்டு பட்டா படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 13 நபர்களுக்கு சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய கிரைய முன் பாத்தியஸ்தர் வேலம்மாளுக்கு எவ்வளவு

விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்றால் 4 செண்ட் நிலம் அதில் 2 செண்ட் நிலத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன்.

மேற்படி வேலம்மாளுக்கு 4 செண்ட் நிலம் பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வேலம்மாளிடமிருந்து நான் 2 செண்ட் நிலத்தினையும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 2 சென்ட் நிலத்தையும் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்துக்கும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற நிலத்துக்கும் இடையே கிழமேலாக பாதை செல்கிறது என்றால் சரிதான். பாதையின் விஸ்தீரணம் 12 அடி இருக்குமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**(1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு